மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
04 MAY 1998
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

# பாதுகாவலன்

PATHUKAVALAN

Registered as Catholic Weekly

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 124 இதழ் 7 விலை 5 30 - 04 - 1998

**விமான மூலம் பாதுகாவலன்**

வெளியூர் பாதுகாவலன் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி ·
உங்கள் பாதுகாவலன் விமானமூலம் இனி நேரத்திற்கு வந்தடைவான்.

(ஆ-ர்)

பொ ம
7 MAY 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் புதிய நியமனங்கள் 1998 — 2001

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் புதிய தலைவராக ஆயர் பேரருள்திரு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையும், உபதலைவராக திருமலை மட்டுநகர் ஆயர் பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் நியமனம் பெற்றுள்ளனர். யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 1) திருவழிபாடும், பண்பாடும் 2) குருமடங்கள், குருக்கள் துறவியர், பொது நிலை நிறுவனங்கள் 3) சமூகத் தொடர்புகள் ஆகிய மூன்று ஆணைக்குழுக்களுக்கும் உப தலைவராக (Vice Chairman) நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை பணியாற்றுவார்கள்.

## யாழ்ப்பாணத் திருச்சபைக்கு இரண்டு புதிய குருமணிகள்

குமுளமுனை பங்கைச் சேர்ந்த திரு. செபமாலை, திருமதி மரியம்மா தம்பதிகளின் புதல்வர் அருள்சகோதரர் செபமாலை செபநேசரத்தினம் ஏப்பிரல் 25, 1998இல் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் குமுளமுனை புனித அந்தோனியார் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்துஅரசர் ஆலயப் பங்கைச் சேர்ந்த அமரர் திரு ஆசிர்வாதம் போல், திருமதி மேரிதிரேசா போல் தம்பதிகளின் இளைய புதல்வர், அருள்சகோதரன் எமில் ராஜேஸ்வரன் போல் மே 11ஆம் திகதி யாழ், புனித மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.



அருள்சகோதரர் செபமாலை செபநேசரத்தினம்

அருட்சகோதரர் செபமாலை செபநேசரத்தினம் தனது ஆரம்பக் கல்வியை குமுளமுனை அ.த.க பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

அருட்சகோதரர் எமில் இராஜேஸ்வரன் போல் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

இவர்கள் இருவரும் கொழும்புத்துறை புனித வளனார் குருத்துவக் கல்லூரியில் தமது ஆரம்ப உருவாக்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)



அருள்சகோதரர் எமில் இராஜேஸ்வரன் போல்

## 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைக்கு முன் வந்து நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண முன்வாருங்கள் — யாழ். ஆயர்

யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் வன்னிக்குச் சென்றபோது புலிகள் இயக்கப் பிரமுகர்களிடம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்குப் பதிலளித்த விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் தீர்வு காண செயல்படவேண்டியது அரசாங்கமே. 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் தீர்வுகாண எமக்கு இன்னும் விருப்பம் உள்ளது என்று தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் யாழ் ஆயர் வன்னியில் ஆற்றும் பணிகளுக்காக பாராட்டுக்களையும், நன்றியையும் கூறியதோடு வன்னிமக்களின் துன்பங்களை வெளிக்கொணர ஆயர் தம்மால் இயன்றவகையில் பணி ஆற்றும்படியும் வேண்டிக்கொண்டனர்.

## எமது நாட்டை ஆபத்திலிருந்து மீட்க உழைக்கும்படி நாட்டின் பெயரால் வேண்டுகிறோம்

— இலங்கை ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சித் தலைவரிடமும் ஆயர் மன்றம் வேண்டுகோள்

மேற்படி வேண்டுகோளை இரத்தினபுரி ஆயர் மல்கம் றஞ்சித்ஆண்டகையும், யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் எதிர்க் கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர். (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## வன்னியில் சமர் தொடர்கிறது

★ மல்லாவியில் மக்கள் இடம் பெயர்வு
★ வெயிலின் கொடுமை அகோரம்
★ மாணவர்கள் மயங்கி விழுகின்றார்கள்
★ கிபீர் கண்மூடித்தனமாக தாக்குகின்றது
★ மருத்துவ வசதிகள் மிக மோசம்

— கிளி - முல்லை மறைக் கோட்ட முதல்வர் P. இருதயதாஸ் அடிகள் வன்னி நிலை பற்றி காவலனுக்கு கருத்து தெரிவிப்பு —

இருதயதாஸ் அடிகள் தமது தந்தையாரின் இறப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கல்முனையூடாக யாழ் வருகை தந்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்)

## பலாலி ஆசிரிய கலாசாலையில் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா

கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா இன்று நமக்கு அர்த்தமுள்ளதாக வேண்டுமானால் இறைவன் தந்த வளங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

— பலாலி ஆசிரிய கலாசாலையில் அருள்திரு R. சூசைநாதன்

பலாலி ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க ஆசிரிய மாணவ மன்றத்திற்கான கிறிஸ்து உயிர்ப்பு விழா கொண்டாட்டமும் மறைக்கல்வி நிலைய புதிய இயக்குனர் R. C. X நேசராஜா

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

## நெடுந்தீவில் மறைக்கல்வி நடுநிலையம்

இம்மாதம் 23ம் திகதி முதல் 27ம் திகதி வரை யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குனரும், இயக்குனர் குழுவும் நெடுந்தீவில் தங்கியிருக்கும் இக் காலப்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## அமலமரித் தியாகிகளுக்கு புதிய குருக்கள் மூவர்

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் G. வென்சஸ்லாஸ் S. அன்புராசா என்பவர்கள் ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி மடுத்திருப்பதியில் பேரருள்திரு இராயப்பு யோசப் ஆண்டகையால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருள்சகோதரன் பெனடிக்ற் யூஜின், தாண்டவன்வெளி, மட்டக்களப்பில் பேரருள்திரு L. R. அன்ரனி ஆண்டகையால் மே மாதம் 2ஆம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.

✶ அருள்சகோதரன் G. வென்சஸ்லாஸ் o. m. i., அருள்திரு பிலேந்திரனினதும், அருள்சகோதரன் எமில் ராஜேஸ்வரன் போல், அருள்திரு ஜீவாபோல் o.m.i. இனதும் சகோதரர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அருள்திரு H. J. வெபர் காலமானார்

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத் துறையின் தந்தை என அன்பாக அழைக்கப்பட்டுவந்த அமெரிக்க நாட்டுக் குருவானவர் வணபிதா வெபர்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் [ திருப்பாடல்கள் - 127 - 1 ]

# பாதை மாற அன்பின் அழைப்பு

## எம்கருத்து

### ஒன்றிணையும்போதே தீர்வு ஆரம்பமாகும்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் 1998 - 2001 புதிய நியமனங்கள் வெளிவந்துள்ளன.

அனுராதபுர ஆயர் பேரருள்திரு ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை ஆயர் பேரவையின் தலைவராகவும், திருமலை– மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை உபதலைவராகவும் நியமனம் பெற்றுள்ளனர். பாராட்டுகின்றோம். பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

இலங்கை மண்ணில் கத்தோலிக்க மதத்திற்கு ஒரு சிறப்பான தனி இடமுண்டு. கத்தோலிக்க மதம் ஒரு சர்வதேச மதமாக விளங்குவதால் மட்டுமன்று, தமிழ் கத்தோலிக்கர்களையும் சிங்கள கத்தோலிக்கர்களையும் இணைக்கின்ற ஒரு பாலமாக இம்மதம் விளங்குவதனாலுமே.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கம் புதுப்பொறுப்புக்களை ஏற்றவுடன் மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சி தலைவருக்கும் கூட்டாக அறிக்கை ஒன்று சமர்ப்பித்துள்ளனர்.

துன்பம் மிக்க இந்நேரத்தில் தங்கள் வேற்றுமைகளைக் களைந்து பேச்சு வார்த்தை மூலமும், கலந்துரையாடல் மூலமும் நீண்ட காலமாக செயலற்றுக் கிடக்கும் எமது நாட்டை ஆபத்தில் இருந்து மீட்க உழைக்கும்படி நாட்டின் பெயரால் வேண்டுகிறோம். உங்கள் இரு அரசியற் கட்சிகளுக்குமிடையே உள்ள உடன் உழைப்பின்மையும், ஒத்துழைப்பில்லாமையும் இறுதியான அரசியல் தீர்வுக்குப் பெரும் தடையாய் உள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கை கத்தோலிக்க மக்களின் தலைமைப் பீடமான ஆயர்மன்றம் வடபகுதி கத்தோலிக்கரையும், தென்பகுதி கத்தோலிக்கரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதால் இப்பணியை முன்னின்று செயலாற்ற வேண்டியவர்கள் இவர்களே.

யாழ் ஆயர் அவர்களும் வன்னியில் விடுதலை புலிகள் இயக்கப் பிரதி நிதிகளைச் சந்தித்த போது தமது நீண்டகாலக் கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை மூலம் ஒரு நிரந்தரத்தீர்வு காண முன்வாருங்கள் என அழைப்பு விடுத்திருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களும் சாதகமாகவே பதில் தந்துள்ளனர்.

சிங்கள-தமிழ் புத்தாண்டு செய்தியில் சகல தமிழ் அமைப்புக்களும் தமது வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைய வேண்டும் என்று தமிழ் கட்சிகள் பல அழைப்பு விடுத் திருப்பதும் வரவேற்கத்தக்கது.

தமிழ் மக்களுடைய நீண்ட போராட்ட வரலாற்றில் கட்சிகள் தமக்கிடையில் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டதால் அமைதிக்கான முயற்சிகள் பல தடவைகள் முறியடிக்கப்பட்டன.

அண்மைக்காலத்தில் உலகின் பல நாடுகளில் உள்ள தீர்க்கப்பட முடியாத தெனக் கருதிய பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும் வேளையில் இலங்கைப் பிரச்சனைக்கான தீர்வு இன்னும் எட்டப்படாமல் இருப்பது வேதனைக்குரியதே. ஈரான் ஈராக் பிரச்சனை முதல் ஜரிஸ் பிரச்சனை வரை மிகப் பழமையான பிரச்சனைகள் பல தீர்வை அண்மிக்கும் வேளையில் எமது நாட்டின் பிரச்சனை தீர்வு காணப்பட முடியாத தொன்றா?

கட்சிகளுடைய ஒருங்கிணைவும், கூட்டு முயற்சியும் அழிவின் வரலாற்றைத் தொடர வல்ல, அமைதிக்கான ஆக்க பூர்வமான செயற்பாட்டைத் தொடர்வதற்காகவே அமைய வேண்டும்.

ஆயர் பேரவையின் சிங்களக் கட்சிகள் தமிழர்களின் நிரந்தரத்தீர்விற்கு ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் என்ற அழைப்பையும் தமிழ்க்கட்சிகள் தமது வேறுபாடுகளைக் களைந்து நிரந்தர தீர்விற்கு ஒன்றாகவேண்டும் என்ற செய்தியையும் உரியவர்கள் ஏற்பார்களா?

---

இவ்வுலகில் எல்லையில்லா இன்பங்களைத்தேடி அலையும் எம்முடைய மனங்கள் இன்றும் தமது தேடுதலைத் தொடரத்தான் செய்கின்றன. இன்றைய சுயநல தேடுதல்களால் நிலையான மகிழ்ச்சியை, சந்தோஷத்தை, வாழ்வைப் பெற்றுக் கொடுக்க முடியுமா என்பது கானல் நீரின் கதையாகி விடுகின்றது. ஏனெனில் நாங்கள் நிலைவாழ்வைத்தேடுகிறோம். ஆனால் கண்டுபிடிப்பதற்கான உண்மை வழியை ஒதுக்கி வைத்துவிட்டு, தண்ணீரில் வரைந்த கோலங்கள் போன்ற இவ்வுலக இன்ப வழிகளைப் பின்பற்றுகிறோம். இப்படி என்றால் எப்படி முடிவில்லா, வாழ்வுகிடைக்கப்போகின்றது?

நாங்கள் பின்பற்றுகின்ற பாதையே எமக்கு புதைகுழியாக அமைந்து, எம்மை ஏமாற்றிவிட்டு, அனலில் துடிக்கும் புழுப்போன்று நாம் துடிக்கின்ற போது வேடிக்கை பார்க்கின்றது. இதுதான் நாம் தேடி அலையும் எல்லையற்ற இன்பமா? அன்றி முடிவில்லா வாழ்வா? இல்லவே இல்லை. எமது பாதை மாற்றப்பட வேண்டும்; ''ஆண்டவரின் அன்பு'' என்ற பாதை எம்மனங்களில் பதிக்கப்படல் இன்றியமையாததாக இருக்கவேண்டும். இறை அன்பை, உண்மையான அன்பை மனித மனங்கள் காணவேண்டும். வியப்பின் எல்லையை விஞ்சியது இப்பாதை என்பதை உணரவேண்டும்.

இந்த உலகினால், இவ்வுலக இன்பங்களால் கொடுக்கமுடியாத ஓர் உன்னத வாழ்வுக்கு ஏன் மனித மனங்கள் ஏங்கித் தவிக்கவில்லை? இப்பாதை சிலுவையின் பாதை என்பதனால் எம் எல்லோருக்கும் இது வேப்பங்காயாகி விட்டது போலும். இந்நிலை மாறி, அண்ணல் இயேசுவின் பாதையில் நடப்பதனால் வேப்பிலைக் கசப்பும் தேனாக மாறமுடியும் என்பதை இயேசுவுடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு எமக்கு காட்டி நிற்கின்றன.

திருவிவிலியத்தில் பக்கத்திற்குப் பக்கம், வரிக்கு வரி இறைவன் ஏன் அன்பை எடுத்துரைக்கின்றார்? இந்த அன்புப் பாதைதான் எல்லையில்லா இன்பங்களைத் தேடித்தரும் என்பதற்காகத்தான். இவ்வன்புப் பாதை வருடா வருடம் தனது உன்னத நிலையை பாடுகளின் பாதையூடாக காட்டிக் கொண்டே இருக்கிறது. மனித மனங்களை அன்பு செய்வதாக கூறிக்கொண்டே இருக்கிறது. உண்மை அன்பு மணப்பது வெறும் சொற்களிலல்ல, செயல்களில் தான், உயர்ந்த அன்பைக் காட்டும் சிலுவைப்பாதை அரிய செயல்களை எமக்கு ஆற்றுவதுடன் அன்பு செய்வதாக சொல்லிக்கொண்டே செல்கின்றது. சின்னதோ பெரிதோ என்ன செய்தாவது இன்புறுத்திக்கொண்டே இருப்பது தான் இந்த அன்புப்பாதையின் இயல்பு. சிலுவையில் நமக்காக இயேசு சிந்திய இரத்தத்தினால் விடுதலை அடைந்தோம் எமது பாவ வாழ்வில் இருந்து, எமது துர்க்குணங்களில் இருந்து, எமது ஈவிரக்கமற்ற கல்மன வாழ்க்கையில் இருந்து விடுதலை பெற்றோம். இவ்வாறு விடுதலை பெற்றவர்களாக புதுப்பாதை கண்டு புத்தூக்கத்துடன் அப்பாதை தொடர்ந்துகொண்டு இருக்கின்றோம். இச்சிலுவைப் பாதையின் வெற்றி எம் எல்லோருடைய வெற்றியாக அமைந்து விடுகின்றது. புது வாழ்வுக்கு தேடிக்கொடுக்கப்பட்ட கிடைத்தற்கரிய வெற்றி இது. பழைய வாழ்வுக்கு இறந்து புதுவாழ்வுக்கு உயிர் பெறும் பாதையைக் காட்டிய வெற்றிதான் சிலுவைப்பாதை. இதுதான் சிலுவை அன்பின் மகத்துவம்.

எனவே இந்த இன்பப் பாதையைத் தேடி அலையும் மனங்களாக எம் எல்லோருடைய மனங்களும் மாறி வாழ்வில் உயர்வைக்கண்டு, சிலுவையின் பாதையை வாழ்ந்து, அதனது அன்பை வாழ்ந்து முன்னேறுவோம், வாழ்வில் முடிவில்லாத இன்பத்தைக் காணுவோம், இதற்காக தினமும் உழைப்போம், உயர்வைக் காண்போம்.

சகோ. சா. ஜஸ்ரீன்

## "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக"

இருள் தனை விரட்டி,
இன்னது உண்மையென புலப்படுத்தி
பயம் போக்கி
பேதமை தனை ஒழிப்பது ஒளி.
''நானே உலகின் ஒளி'' – என்ற
நல்லாயன் இயேசுவின் வார்த்தைகள்
நாளைய பொழுதில் – நல்
நம்பிக்கையில் உரம் பெற்று
நாளாந்த வாழ்வில் நல்லவை இடம்பெற
நாதன் இயேசுவுக்காய் நம்மை மாற்றுவோம்.
சூரியன் தனை மறைக்க
சூழும் கருமேகம் நம் செயல்கள்.
மழைக்கால வானம் போல்
மங்கி இருண்டு வரும் நம் சொற்கள்.
இருள் அகற்றும் அகல் விளக்குகள் அல்ல
இருளின் கருவூலங்கள் தாம் நம் சிந்தனைகள்.
அந்திமாலைப் பொழுதில்
கோடை இருளில் பட்ட பிளம்பு போல்
பட்டெனப் பளிச்சிடும் மின்னல் – நம்
பார்வையைத் தொட்டது போல்
கண்களைக் கவர்ந்திடும்
கண்கவர் வர்ணம் போல்
எம் ஒளி மனிதர் முன் ஒளிர
என்றுமே எம்மைப் பயன்படுத்துவோம்.

S. மரியா

## பலாலி ஆசிரிய கலாசாலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிகளாருக்கு வரவேற்பும், முன்னாள் இயக்குனர் R. H. சகாய நாயகம் அடிகளாருக்கு பணிநலன் பாராட்டு நிகழ்வும், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவி செல்வி ம. ஞானமலர் தலைமையில் யாழ் பல்கலைக் கழக நல்லாயன் நிலையத்தில் 22/4/98 இல் நடைபெற்றது.

மேற்படி விழாவில் உயிர்ப்பு விழாச் செய்தி அறிவிக்கும் போது சூசைநாதன் அடிகள் ''கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா இன்று அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால் இறைவன் நமக்குக் கொடுத்துள்ள வளங்கள் அனைத்தையும் மற்றவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் உயிர்த்த கிறிஸ்துவை அனுபவிக்க முடியும்'' என்று குறிப்பிட்டார்.

புதிய மறைக்கல்வி நிலைய இயக்குனர் நேசராஜா அடிகள் மறை உரையாற்றும் போது ''நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற ஆசிரிய திலகங்கள் நீங்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை உயிர்ப்பிக்கின்றவர்களாக, கிறிஸ்துவின் உயிர்ப்பின் சாட்சிகளாகத் திகழ வேண்டும்'' என்றார்.

அதிபர் திரு. சோ. பத்மநாதன், பீடத் தலைவர் திரு துரை ஆரோக்கியதாசன், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும், இந்து மாமன்ற தலைவருமான திரு சிவபாத சுந்தரமூர்த்தி முன்னாள் மறைக்கல்வி நிலைய இயக்குனர் சகாயநாயகம் அடிகள் பகுதி நேர விரிவுரையாளர் திரு S. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். – தகவல்: ஈ. ஜே. லெஸ்லி

(ஆங்கில நெறி – 1 ஆம் வருடம்)

## ஞாயிறில் உயிர்த்துமே காவியமானவர்

நடுவிருள் வேளையில் குடிதனில் பிறந்தவர்
நாடுமே ஒளிபெற வாழ்வினை அளித்தவர்
பாதமும் நொந்திட வேதமும் பரப்பினார்
புதுமைகள் புரிந்திட்ட நாயகன் யேசு
மலைமீது மேறியே பிரசங்கம் செய்தவர்
சிலையாகி பீடத்தில் அருள்தரும் இரட்சகர்
யூதரின் கரங்களால் சிலுவையில் மரித்தவர்
ஞாயிறில் உயிர்த்துமே காவியமானவர்.

அல்வை : கே. ஆர். திருத்துவராஜா

## விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம்

அருள்திரு ம. இ. பயஸ் அடிகளார் "விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம்" என்ற தலைப்பில் வேதாகம ஏடுகளுக்கு விளக்கம் தர முற்படுகிறார்.

"சிறைக்கூடத்தில் இருந்தபோது எனக்கும் Fr. ஜெபநேசனுக்கும் வேதாகமத்தை வாசிக்க நிறைய நேரம் கிடைத்தது. முழு வேதாகமத்தையும், நாம் இருவரும் மாறி மாறி வாசித்து முடித்தோம், அப்போது குறித்து வைத்துக்கொண்ட சில சிந்தனைகளைப் பின்னர் வேறு பல புத்தகங்களையும் படித்து சரிசெய்து கொண்டேன், அதனைப் பாதுகாவலன் வாசகர்களோடும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்"— என்று விளக்கம் தந்த அவருடைய கட்டுரை இதோ தொடங்குகிறது. வாசித்துப் பயனடையுங்கள். (ஆ—ர்)

பல நூல்களின் ஒற்றுமையான தொகுப்பினை வேதாகமம் / விவிலியம் தன்னகத்தே கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் (73) உள்ளன, என்பது கத்தோலிக்க திருச்சபையின் சட்ட முறையில் உள்ளது. (திரிதெந்தின் சங்கம் சித்திரை 8,1546) தமிழ் மொழி பெயர்ப்பு, பொது மொழி பெயர்ப்பு என்னும் அடிப்படையில், விவிலியம் சங்கங்களின் இணயமும், வத்திக்கான் ஒன்றிப்புச் செயலகமும் இணைந்து சகல கிறிஸ்தவர்களுக்கும் என்று வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ சபைகளின் விவிலியத்தில், பழைய ஏற்பாடு 39 நூல்களும், புதியஏற்பாடு 27 நூல்களும் உள்ளன. (1995ம் ஆண்டு அச்சிடப்பட்டது.)

அனைத்து நூல்களும் பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டுள்ளன, இறைவனே விவிலியத்தின் ஆசிரியர். அவர் தன்னை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தினார். எனவே பரிசுத்தவேதாகமமானது இறைவனினதும்,மனிதனினதும் நூலாகும். பரிசுத்த ஆவியின் அருளுடன் விவிலியத்தை அணுகும் பொழுது இறைவார்த்தை உயிருள்ள வார்த்தையாகிறது. தேவநற்கருணை வாழ்வின் அப்பம் என்றால் வேதாகமம் வாழ்வின் வார்த்தை என்பதை உணர்வோம்.

விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் "ஐந்நூல்" என்று அழைக்கப்பட்டது. இஸ்ரவேல் (எபிரேயர், யூதர்) மக்களுக்கு விடுதலை கொடுத்து, புதிய இனமாக்கி, புதிய பூமியை நோக்கிய பயணஞ்செய்து, புதிய வரலாறு படைத்த, மாபெரும் தலைவராகிய மோயீசன் ஐந்நூலின் அடங்கியுள்ளவற்றின் கணிசமான பகுதிகளின் ஆசிரியர் என ஏற்றுக்கொள்ளப்பட்டார். இயேசுவும் அவரது சீடர்களும் இதைக் குறித்து கேள்வி எழுப்பவில்லை. யோ. 1:45; 5:45–47, உரோ 10:5, லூக். 24:25—27—14.

தோரா, சட்டங்கள், பெந்தாதுக் என்னும் தலைப்பிலும் ஐந்நூல் அறிமுகமாயிருந்தது. விவிலியத்தின் வேறு நூல்களான சாமுவேல் I, II ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்தவர்கள் ஆச்சரியப்படவேண்டிய கட்டங்களைச் சந்தித்தனர். 1:10:17–24. 11:15 சாமுவேல் அரசனாக்கப்படுதல் இருமுறைகள் காணப்பட்டன. 1சா;16.14–23, 55–58 தாவீது இருமுறைகள் சவுலுக்கு அறிமுகம் செய்யப்பட்டார். ஒரே விதமான இரு சந்தர்ப்பங்களில் சவுலின் உயிரைப் பறிக்காது விடுகின்றார். தாவீது (1சா: 24:3–7; 26:5–12). ஒரு அதிகாரத்தில் தாவீது கோலியாத்தைக் கொல்வதையும் வேறு அதிகாரத்தில் எப்படி எல்கானான் கோலியாத்தைக் கொன்றான் என்று காணப்பட்டது (1சா 17: 11சா. 21:19)

உலகப் படைப்பு இருமுறை தொடக்க நூலில் உண்டு. (1:2–40+2:46–3:24) அதேபோல் காயின் கெனான் தலைமுறைப் பட்டியல் (4:17f+5:12–17),. வெள்ளப் பெருக்கின் இரு இணைக்கப்பட்ட விபரங்களும் (அதி. 6-8) உண்டு. மேலும் ஐந்தாவது நூலாகிய இணைச்சட்டம் (உபாகமம்) 34ம் அதிகாரத்தில் (1–12) மோசேயின் இறப்பு கூறப்படுகிறது. ஐந்நூலின் எல்லாப் பகுதியும் வெவ்வேறு பாரம்பரியங்களின் வளர்ச்சியை உள்வாங்கி மிளிர்கின்றன. இறைவனை "யாவே" (J) என்று அழைக்கும் பாரம்பரியம் கி. மு. 10ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இப்பாரம்பரியம் ஆதியாகமத்திற்கு அடிப்படை அமைப்பை அளிக்கிறது. யூதாவில் இது உருவாகியது என்றும் சலமோன் அரசன் காலத்தில் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. 'எலோயீம் "(E) பாரம்பரியத்தில் இறைவன் எலோயீம் என்று அழைக்கப்படுகின்றார். இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் வெளி ஒன்றைப் பற்றி நல்நடத்தையில் கவனம் செலுத்தியுள்ளது. குலமுதல்வர் ஆபிரகாம் அவர்களுடன் இது தொடங்குகிறது. மனித இனத்தின் தொடக்கம் பற்றி இங்கொன்றுமில்லை. யாவே பாரம்பரியம் பின் வடக்கிலுள்ள குலங்களால் பேணப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. இவ்விரண்டும் இணைக்கப்பட்டு கி. மு. 8 அல்லது 7ம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் எடுக்கத் தொடங்கியது எனலாம். குருக்கள் பாரம்பரியம் கட்டளைகளை சுற்றிச் சுழல்கிறது. பலிப்பீடம். பலி. திருவிழாக்கள் தனிப்பெரும் மகிமை பெறுகின்றன, பாராட்டப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு, திருவழிபாட்டிற்குரியவை. முன்னுரிமை பெறுவது துலாம்பரமாகத் தெரிகிறது. கால வரையறையையும்தலைமுறைப் பட்டியல்களிலும் மிகவும் நுணுக்கமாயுள்ளது; யெருசலேம் ஆலயத்தின் குருக்கள் மத்தியில் வளர்ந்து இஸ்ராயேல் மக்களின் விடுதலையின் மீள் குடியிருப்பின் பின் வலுப்பெற்றது. நாம் இப்போது கொண்டிருக்கும் வடிவில் கி. மு. 5ம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். ஐந்நூலின் முதல் நான்கு நூல்களும் இவ்வாறு இருப்பினும் 5ம் நூல் தனித்து நிற்கின்றது.

(வளரும்)

## யாழ்ப்பாணத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தைப் பெற்று பின் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தமது மெய்யியல், இறையியல் கல்வியையும் கற்றுத் தேர்ந்தனர்.

13 . 10 . 97 அன்று திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப் பட்ட இவர்கள், யாழ். அடைக்கல அன்னை ஆலயம், உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம் ஆகிய இடங்களில் பணியாற்றினர்.

## நெடுந்தீவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இவர்கள் 6ம் ஆண்டு முதல் 9ம் ஆண்டு வரையிலான மாணவருக்கு மறைக்கல்வி அறிவும், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்களும், பங்கு மறையாசிரியர்களுக்கு மறைக் கல்வி கற்பிக்கும் அறிவுரை வகுப்புக்களும், கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினருக்கு கூட்டமும் நடத்தப்பட்டது. புதிய இயக்குனர் நேசராஜா அடிகளின் முதலாவது செயற்பாடு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அருள்திரு வெபர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது 84 வது வயதில் காலமானார். 1914 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த அருள் திரு வெபர் 1931 இல் இயேசு சபையில் சேர்ந்து 1940 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார். 1947 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியது முதல் ஏறக்குறைய 54 வருடங்கள் இலங்கை மண்ணில் திருமலை / மட்டுநகர் மறைமாவட்டத்தில் பணி புரிந்துள்ளார். மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத் துறையில் இவர் ஆற்றியபணி சிறப்பு மிக்கது. அருட்சகோதரர் ஜேம்ஸ் பீரிசின் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் A. M. ஹிஸ்புல்லா நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், அரச அதிபர் ஏ. கே. பத்மநாதன் உட்பட பல அரச பிரமுகர்கள் அஞ்சலியுரையாற்றினர்.

அடிகளாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இளைப்பாற வேண்டுவோம்.

### எழுதி அனுப்புங்கள்.

- பெப்பினோவின் அன்பு நண்பன் வைலற்றாவுக்கு என்ன நடந்தது?
- வைலற்றாவின் முடிவு பரிதாபமாகப் போனதா?
- பெப்பினோவின் விசுவாசம் நிறைவேறியதா?
- அசிசியாரின் ஆலய நிர்வாகம் பெப்பினோவின் உணர்ச்சியைப் புரிந்து கொண்டு உதவி செய்ததா?
- பெப்பினோவுக்கு அறிவுரை கூறும் இக்கட்டான நிலையில் டமிக்கோ அடிகளார் என்ன முடிவு எடுத்தார்?

சிறுவர்களுக்கான

# தொடர்குறுநாவல்

# ஒரு சிறிய புதுமை

நாவலின் முடிவை பலர் எழுதி அனுப்பியிருந்தனர். அவற்றுள் சிறந்த சிலவற்றை மட்டும் இங்கே தருகிறோம். இன்னும் எழுதாதவர்கள் உடன் எழுதி அனுப்புங்கள். சரியான முடிவிற்கு பரிசு உண்டு.

(ஆ-ர்)

டமிக்கோ அடிகளாரின் ஆலோசனைப்படி புனித அசிசியார் ஆலயப்பரிபாலகரிடம் தனது விண்ணப்பத்தை எடுத்துக் கூற விரைந்து சென்றான் பெப்பினோ. அங்கு பரிபாலகரின் உதவியாளர் சிறுவனை சிறிது நேரம் தாமதிக்குமாறு கூறினார். பெப்பினோ தனது வேண்டுதல் ஏற்கப்படவேண்டும் என்று புனித அசிசியாரை வேண்டிக் கொண்டிருந்தபோது பரிபாலகர் அங்கு வந்து சேர்ந்தார். பரிபாலகரும் அவன் ஆரம்பத்தில் சந்தித்த பேர்னாட் என்ற துறவிபோல தோற்றமளித்தாலும் இவர் தனது வேண்டுதலை நிச்சயம் ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையுடன் தனது விண்ணப்பத்தை எடுத்துக் கூறினான். அவனது வேண்டுதலை பரிபாலகர் நன்கு செவிமடுத்து கேட்கத் தொடங்கிய போதே தனது வேண்டுதல் நிச்சயமாக ஏற்கப்படும். தனது அன்பு வைலெற்றா சுகமடையும் என்ற நம்பிக்கை அவன் மனதில் துளிர்விடத் தொடங்கியது. இறுதியாக "ஆலயமும், கல்லறையும் மனிதர் வழிபடவும் வணக்கம் செலுத்தவுமே தவிர மிருகங்களுக்கல்ல" என்று பரிபாலகர் கூறியதும் அவனது நம்பிக்கைகள் யாவும் மலை உச்சியிலிருந்து அதலபாதாளத்தை நோக்கி சரிந்து விழுவது போன்று அவன் உணர்ந்தான். இருந்தும் நம்பிக்கையைத் தளரவிடாது மீண்டும் மீண்டும் கெஞ்சிக்கேட்டான். ஆலயப் பரிபாலகரோ தனது அலுவலக அறையினுள் சென்று கதவை இறுகச் சாத்திக் கொண்டார். என்ன செய்வான் சிறுவன் அவனது இறுதி நம்பிக்கையும் வீண்போனதாக அவன் உணர்ந்தான். இயலாமையின் வெளிப்பாடாக அவனது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக சொரிந்தோடத் தொடங்கியது. தளர்ந்த நடையுடன் தனது அன்புக் கழுதை படுத்திருந்த புனித அசிசியாரின் பேராலயம் அமைந்திருக்கும் மலைக் குன்றுக்கு மீண்டும் சென்றான். கழுதையின் கழுத்தில் தலை புதைத்து தேம்பித்தேம்பி அழத்தொடங்கினான். தனது இறுதித் துணையாகிய வைலெற்றா தன்னைவிட்டு பிரியப் போவது நிச்சயமாகிவிட்டது என அவன் நினைத்ததும் அவனது கவலையை ஆற்றமுடியாமற் போனது. திடீரென ஒரு ஒளிக்கீற்று அவன் மனதில் தோன்றியது. அந்த மலைக்குன்றில் இருந்தபடியே கழுதையின் கழுத்தைக் கட்டியணைத்தபடி தனது வேண்டுதலை புனித அசிசியாரை நோக்கி உரக்க சொல்லத்தொடங்கினான். என்ன ஆச்சரியம் சிறிது நேரத்தில் தலை குத்திப் படுத்திருந்த கழுதை தனது தலையை நிமிர்த்தியது. எழும்பவே முடியாது படுத்திருந்த கழுதை துள்ளி எழும்பி அங்குமிங்கும் ஓடத் தொடங்கியது. அது ஆனந்தக் களிகொண்டு ஓடித்திரிவது போல அவனுக்குத் தோன்றியது. அவனது கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. சிறிது நேரத்தில் அவனது அன்பு வைலெற்றா ஓடி வந்து அவனது காலடியில் தனது தலையை பணிந்து தனது நன்றியை அவனுக்கு தெரிவித்துக் கொண்டிருந்தது எந்தத்தடை, தாமதம் வரினும் நாம் இறைவனில் மேற்கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கை நிச்சயம் வெற்றி தரும் என்ற திடமான உண்மையுடன் பெப்பினோ தனது வீடு நோக்கி ஆனந்தமாகச் சென்றான்.

'திருத்தணிகை'
ஆடிய பாதம் வீதி,
நல்லூர்.

ம. ஜெயேந்திரன்

★ ★ ★

......பெப்பினோ யோசனையில் மூழ்கினான். டமிக்கோ அடிகளிடம் விடைபெற்றுக்கொண்டு வைலெற்றாவோடு வீதியில் நடந்தான். அடுத்து என்ன செய்யலாம் என்பதே அவனது யோசனையாக இருந்தது. அவன் மிகவும் களைத்திருந்தான். அசிசி நகருக்குச் சென்றதிலிருந்து அவன் ஒன்றுமே சாப்பிடவில்லை. ஏதோ நினைவுக்கு வந்தவனாக தான் தங்கியிருக்கும் நிக்காலோவின் தொழுவத்திற்கு வந்தான். வைலெற்றாவுக்குத் தண்ணீர் காட்டினான். அது கால்களை மடித்து நிலத்திலே அமர்ந்தது. அதனுடைய தலையைத் தன் கைகளால் தடவியவாறு வைலெற்றாவின் மடியில் தன் தலையைச் சாய்த்தான். அசிசியாரை நோக்கிப் பிரார்த்தித்தான். "அசிசியாரே என்னுடைய வைலெற்றாவுக்குச் சுகத்தைக் கொடு. நாமிருவரும் உம்முடைய கல்லறையைத் தரிசிக்க உதவி செய்" அவனுடைய கண்கள் தானே செருகிக் கொண்டது. நித்திரையில் ஆழ்ந்தான். நிமிடங்கள் கரைந்தோடின. மறுபுறம் புரண்டுபடுக்க எத்தனித்தவன் திடீரெனக் கண்விழித்தான். அங்கே அவனது வைலெற்றாவைக் காணவில்லை. அவனுக்குத் தலை சுற்றியது. முடியுமான வரை தேடினான். வைலெற்றாவைக் காணாததால் சோர்ந்து விழுந்தான். கால்கள் தள்ளாட நடந்ததைச் சொல்வதற்குப் பங்குத்தந்தையிடம் சென்றான். சிறுவனின் பரிதாபநிலையைக் கண்ணுற்ற பங்குத்தந்தை பெருமூச்சு விட்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே

வீட்டிலே ஆட்டுப்பண்ணை, அவைக்கு உணவளித்து நன்கு பராமரித்து வளர்க்கின்றார், வீட்டுச் சொந்தக்காரர். ஆட்டின் மீதுள்ள அன்பின் காரணமாகவா? இல்லை. அப்படியாயின் அவை மீது ஏன் அந்தளவு கரிசனை? என்றோ ஓர் நாள் அதன் இறைச்சியை உண்பதற்காக. ஆடு விரும்பாமலேயே வீட்டிலுள்ளோருக்கு பலியாக வேண்டிய நிர்ப்பந்தம்.

உலகின் பாவங்களைப் போக்க வந்த சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய யேசு தன் சொந்த விருப்பத்தின் பேரில் தன்னையே நமக்குப் பலியாகத் தந்தார். மனிதன் இறைவனது அன்பிலிருந்து கீழ்ப்படியாமை காரணமாக விலகினான். அவருடனிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டான். மீண்டும் அவனை இறைவனோடு ஒப்புரவாக்க, தான் இரைபோட்டு பராமரிக்கின்ற மக்களுக்காக இறைமகன் கிறிஸ்து தன்னையே இரையாக்கினார். இறப்பு இன்றி உயிர்ப்பு இல்லை. கோதுமை மணி மண்ணில் மடிந்தால் ஒழிய பயன் தர முடியாது. செடியாக முளைக்க வேண்டுமாயின் விதை மண்ணில் மடியவே வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்ள அழைக்கப்படுகின்றான். உயிர்ப்பில் பங்கு பெற வேண்டுமாயின் அவரது பாடுகள், மரணத்திலும் நிச்சயம் பங்கு கொள்ள வேண்டும். நாம் எப்படி அன்று மரித்த கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இன்று பங்கு கொள்ள முடியும்? நமது சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு, நமது சுயநலத்திற்கு, நமது பொறாமை, கோபம், காய்மகாரம் ஆகியவற்றுக்கு இடம் கொடாது அவற்றில் மரிக்கும் போது அதனைத் தொடர்ந்து நாம் அடைகின்ற மகிழ்ச்சி இருக்கின்றதே, அது தான் உயிர்ப்பு. உயிர்த்த ஞாயிறு மட்டுமன்றி நிதமும் இந்த உயிர்ப்பை நாம் அனுபவ ரீதியாகப் பெறலாம்.

ஆகவே உயிர்ப்பை அனுபவிக்க வேண்டுமாயின் நிச்சயம் ''நாம்'' ''நம்மில்'' இறக்கவே வேண்டும். அப்போது தினமும் ''ஈஸ்ரர்''

—அருட்சகோதரி ரஞ்சி.

## முயலுங்கள்!.. விரையுங்கள்!..




நற்செய்தித் தூண்டுதல் போட்டி இலக்கம் 2க்கான உங்கள் விடைகள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதி நாள் 10-5-98 ஆகும். போட்டி 12-4-98 உயிர்ப்பு விழாச்சிறப்பிதழில் உள்ளது. முயலுங்கள்! விரையுங்கள்!!

(ஆ-ர்)

# ஒரு சிறிய புதுமை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

டவராகத் ''தம்பி அசிசிப்பதியரை நம்பிக்கையோடு வேண்டிக்கொள். உன்னுடைய வைலெற்றா பத்திரமாகக் கிடைக்கும்'' என்று ஆறுதல்படுத்தினார். அவருடைய ஆலோசனைப் படி பெப்பினோ அசிசி நகருக்குச் சென்றான். ஓட்டமும் நடையுமாக அசிசியை வந்தடைந்த பெப்பினோ ஆலயப் பரிபாலகரிடம் நடந்ததைக் கூறினான். அவனது நம்பிக்கையைக் கண்ட துறவி அவனை ஆலயத்துக்குள் அனுமதித்தார். விரைந்து படிகளிலேறிய பெப்பினோ அசிசிப் பதியரின் கல்லறை அமைந்திருந்த பகுதியை வந்தடைந்தான். அவனுக்கு அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. அவனுடைய வைலெற்றா கால்களை மடித்து அசிசியாரின் கல்லறைக்கு முன்னே அமர்ந்திருந்தது. அவனைக் கண்டதும் துள்ளியெழுந்து தன்னுடைய எஜமானிடம் ஓடி வந்தது. சந்தோஷத்தால் நிரப்பப்பட்ட பெப்பினோ அதனுடைய தலையை அன்பாகத் தடவினான். தன்னூரில் இருந்து அசிசிக்கு வைலெற்றா எவ்வாறு வந்தது? பேராலயப் படிகளில் எவ்வாறு ஏறியது? அதற்கு இந்த உற்சாகமும் சுகமும் எப்படிக் கிடைத்தது? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டவனாக பெப்பினோ அசிசியார் செய்த அனைத்துக் காரியங்களையும் நினைந்து அவரது கல்லறைக்கு முன்பாக மண்டியிட்டுத் தனது நன்றியறிதல்களைச் சமர்ப்பித்தான். மக்கள் வாழ்த்த, ஆலயப் பரிபாலகர் வியக்க பெப்பினோ தனது வைலெற்றா மீதேறித் தன்னூருக்குப் பயணமானான். நடந்ததனைத்தையும் டமிக்கோ அடிகளிடம் கூறுவதற்காக.

புனித தோமையார்ஆலயம், S. வின்சென்ற் மரிய செல்வம்.
பருத்தித்துறை.

# ஒரு ஆன்மாவின் வரலாற்றிலிருந்து....

கடந்த ஆண்டு உலகெங்கும் இயேசுவின் புனித குழந்தை த்ரேசா அமரத்துவம் அடைந்த 100வது ஆண்டினை ஒட்டி விழாக்கள் கொண்டாடும் வேளையில் அந்தப் புனிதை தன் தலைமைத் தாயாரின் கட்டளைப் படி தன் கைப்பட எழுதிய தனது வாலாற்றை ஒரு ஆன்மாவின் வரலாறு என்ற பெயரில் எழுதப்பட்ட நூலை வாசிக்கும் ஒரு அருமையான சந்தர்ப்பங்கிடைத்தது. அதனை வாசிக்கும் போது என் உள்ளத்தைத் தெளிய வைத்த சில பகுதிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி இதனை எழுதுகிறேன்.

— செல்வம் —

கடவுள் ஒருவரன்றி வேறு எப்பொருளும் உள்ளத்திற்குத் திருப்திதர முடியாது.

ஆண்டவர் யாரி மீது இரக்கம் வைக்க விரும்புகிறாரோ அவர் மீது இரக்கம் கொள்கிறார். (யாத்திராகமம் 33; 19) ஆதலின் நம் விருப்பத்தினாலுமன்று, ஆனால் இரக்கம் காட்டும் கடவுளாலேயே, எல்லாம் ஆகவேண்டும்என்கிறார். புனித சின்னப்பர், கடவுள், ஏன், ஒருவரைவிட வேறொருவரை விரும்புகிறார். எல்லா ஆன்மாக்களும் ஏன் ஓரே அளவாக வரங்களைப் பெறுவதில்லை.

ஆண்டவரின், உயிருள்ள தோட்டத்தில் மலரும் ஆன்மாக்களின் நிலை வேற்றுமை, ரோசா மலருக்கும் லீலிப்பூவிற்கும் ஒப்பான பெரும் புனிதர்களைப் படைக்க அவர் திருவுளமானார். அவர்களிலும் எளியோர்களையும் அவர் படைத்தார். அவர் பாதத்தருகில், செந்நீலப் பூக்களைப் போலவும், வயல் வெளிச் சிறு மலர்களைப் போலவும் மலர்ந்து அவர் கண்களை மகிழ்விக்க வேண்டுமென்பதே அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோள், எத்துணை மகிழ்ச்சியோடு அவர்கள் தம் திருவுளத்தை நிறைவேற்றுகின்றனரோ, அத்துணை எளிதில் ஞான வாழ்வின் உச்சித நிலையை அடைவார்கள். கடவுளின் சலுகை பெற்ற பெரிய ஆன்மாக்களுக்கு அவர் தம் அன்பை வெளிப்படுத்துவது போல அவருடைய வரங்களைப்புறக்கணியாத எளிய ஆன்மாக்களிலும், தம் அன்பை விளங்கச் செய்கிறார்.

அன்பின் இயல்பு - தன்னையே தாழ்த்துவது திருச்சபையில் ஒளி வீசித் திகழ்ந்த பேரறிஞர்களைப் போலவே எல்லா ஆன்மாக்களையும்விளங்குதல், கடவுள் அவர்களைத் தேடி இறங்கி வருகையில் போதிய அளவு தம்மையே தாழ்த்தவில்லையென்று சிலர் நினைக்கக் கூடும். மெல்லிய குரலை மட்டும் எழுப்பவல்ல, பகுத்தறிவில்லாச் சிறு குழந்தையை அவரே படைத்தார். அஃதே போல் இயற்கைச் சட்டங்களால் மட்டும் ஆளப்படும் காட்டு மனிதனையும் படைத்தவர் அவரே. இத்தகையோர்களின் உள்ளங்களில் இறங்கி வரும் அளவிற்குத் தம்மைத் தாழ்த்துபவர் களில்தான் இன்பம் கண்டடைகிறார்.

இந்த வயல் வெளிப் பூக்களின் எளிமைதான் அவர் உள்ளத்தைக் கவர்கின்றது. அவர்களிடம் இறங்கிச் சென்று தம்மைத் தாழ்த்துவதால் ஆண்டவர் தம் எல்லையற்ற பெருந்தன்மையைக் காட்டுகிறார். பகலவன் உயர்ந்தகேதுரு மரத்தின் மீதும், சிறிய பூவின் மீதும் தன் கதிர்களை ஒருங்கே பரப்புவதுபோல் தெய்வீகச்சூரியன் எல்லா ஆன்மாக்களையும் அவை பெரியவையாயினுஞ், சிறியவையாயினும், ஒளிமயமாக்குகிறார். இயற்கையின் பற்பல பாகங்களும், பருவங்களும் ஒன்றன் பின் ஒன்றாக அமைத்து குறிப்பிட்ட நாளில் மிகச் சிறிய பூவையும் இதழ் விரியச் செய்வது போல ஆன்மாவின் நன்மைக்கு, எல்லாம் இனிது அமைந்து, துணை செய்கின்றது. அந்திக் கிறீஸ்துவின் காலத்தில் கிறீஸ்தவர்கள் அனுபவிக்கவிருக்கும் துன்பவேதனைகளை நினைவு கூருகையில், என் உள்ளம், எனக்குள் துள்ளி எழுகிறது. அத்தனை வாதைகளையும் நானே சகிக்கத் தயாராயிருக்கிறேன். அன்பின்றிப் பயனில்லை. அன்புக்கு அன்பினால் தான் ஈடு செய்ய முடியும். ஆகவே ஆண்டவரே, நான் உம்மிடம் அன்பைக் கேட்கிறேன். ஆனால் எனது அன்பை உமக்கு எவ்வாறு எண்பித்துக் காட்டுவேன். ஆகவே சிறியவனாகிய நான், பூக்களை வாரி இறைத்து, உமது தெய்வீக சிம்மாசனத்தைப் பரிமளமாக்குவேன். அன்பின் கீதத்தை, இன்பப் பண்ணிசைத்துப் பாடி மகிழ்வேன். என் இதய அன்பரே இவ்வாறு என் இறுதிய வாழ்வை உமது முன்னிலையிலேயே செலவழிப்பேன். பூக்களை வாரி இறைத்துத் தான் என் அன்பை, எண்பிக்க என்னால் முடியும். ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு பார்வையும், அன்றாட வாழ்வின் ஒவ்வொரு பரித்தியாகச் செயலுமே இந்தப் பூக்கள். மிகச் சிறிய செயல்களையும் பயனுள்ளவையாக்கி அவற்றை அன்பின் பொருட்டு செய்து ஒப்புக் கொடுப்பேன். அன்பின் பொருட்டு துன்புறவும், இன்புறவும் ஆவலாய் இருக்கிறேன். இவ்வாறு என் மலர்களை இறைப்பேன். எனக்கு முன் தோன்றும் ஒவ்வொரு மலரின் இதழ்களையும் இறுத்துப் பண் இசைத்துக் கொண்டே உமது முன்னால் இறைப்பேன். மலர்களை முட்கள் நடுவினின்று கொய்தெடுக்க வேண்டுமாயினும் பாடிக்கொண்டே கொய்தெடுப்பேன். முட்கள் எவ்வளவுக் கெவ்வளவு கூர்மையானவையோ, நீட்டானவையோ, அவ்வளவுக்கவ்வளவு, இனிமையாயிருக்கும் என் கீதம்.

ஆனாலும் என் அன்பார்ந்த யேசுவே! என் மலர்களும், கீதங்களும் உமக்கு என்ன பயன் தரப் போகின்றன. இம் மலர் மாரியும், இவ்வெளிய இதழ்களும், என்னைப்போன்ற, ஓர் சிறிய ஆன்மாவின் அன்புக் கீதங்களும், உம்மை மகிழ்விக்கும் என்று மட்டும் உணர்கிறேன். இவை மிகச் சிறியவையெனினும் உமது உள்ளத்தை இன்புறச் செய்யும் என்பதில் மட்டும் ஐயமில்லை. மோட்சவாசிகள் தங்கள் குழந்தையாகிய என்னிடம் இறங்கி வந்து இம்மலரிதழ்களை ஒன்று சேர்த்து உம் கைகளில் ஒப்படைப்பார்கள். உம் தெய்வீகக் கைகள் அவற்றை விலைமதிக்க முடியாத செல்வங்களாக்கும். பின்னர் அவ் விண்ணுலகப் பேரின்ப நாட்டினர் அவற்றை உத்தரிப்புத் தலத்தில், துன்புறுவோர்மீது பொழிந்து, அவர்களை வருத்தும் நெருப்பைத் தணிப்பார்கள். இவ்வுலகில் போர் புரியும் திருச்சபை மீது பொழிந்து திருச்சபையை மகிமைப் படுத்துவார்கள். என் அன்பார்ந்த யேசுவே! நான் உம்மை நேசிக்கிறேன்.

## சிலுவையின் கூற்றுக்கள்

மதம் கொண்டவர்க்காய்
''மன்னியும்'' என்றாய்
உத்தமன் என
உணர்ந்ததால்
''வான் வீட்டில் இருப்பாய்''
என்றாய் வாஞ்சையுடன்,
''முடிந்தது'' என்று
சிந்திய இரத்தம்
சிதறியது முத்துக்களாய்.

எல். ஜொளி
புனித யுவானியார் ஆலயம்
யாழ்ப்பாணம்

## வேதாகம வசனத்தை மனனம் செய்ய 4 வழிமுறைகள்

1. ஒரு வாரத்திற்கு ஒரு வார்த்தையை மனனம் செய்தல்.
2. ஒரு நாளைக்கு 3 தடவைகள் திரும்பத் திரும்ப வாசித்தல்.
3. மனனம் செய்யும் வார்த்தையை உங்கள் விவிலியத்திலிருந்து எடுத்து வாசித்து கருத்தை புரிந்து கொள்ளல்.
4. மனனம் செய்யும் வசனத்தை உங்கள் நண்பர்களுக்கு ஒப்பித்தல்.

தொகுப்பு: S. R. கொன்ஸ்சன்ரைன் C. M. F, புனித பத்திரிசியார் ஆலயம், தலவாக்கலை.

# உயிர்ப்பின் மகிமையில் தூய்மையாவோம்

— அருள்சகோ ம. பத்திநாதர் —

மீண்டும் மீண்டும் உயிர்ப்பை கொண்டாடி மகிழ்கின்றோம். ஆனால் எம் உள்ளங்கள் உணர்வுகள் புத்துயிர் பெறுகின்றனவா அல்லது உயிர்ப்பு ஒரு கொண்டாடி மகிழும் வரலாற்றுநிகழ்வாக மட்டும் மாறி விட்டதா? இன்று எம் சமுதாயம் அழிவை நோக்கி நகர்கின்றது. போர் அழிவு ஒருபுறம். சமுதாயங்களில் ஏற்படுகின்ற சீரழிவு மறு புறம். இவற்றைவிட அழிவுகளும் பெருகுகின்றன. இவை ஏன்? அன்பற்ற உள்ளங்களின் வாழ்க்கை முறைகள் தான் அடிப்படைக் காரணம். அன்பு நெஞ்சம் கொண்டு வாழவேண்டிய உள்ளங்கள் சுய நலத்தையும், அகங்காரத்தையும், பகிரவேண்டிய பண்புள்ள உள்ளங்கள், சுரண்டல்களையும் சமூதாயத்தை வளர்க்க வேண்டிய உத்தம மனிதர்கள் அநியாய வட்டிகளையும், வரிகளையும் அதிகரிக்க ஏழைகள் பெருக வறுமையே வாழ்வாகின்றது. மறு புறத்தில் பாவம் பரவுகின்றது.

அன்பின் உச்ச நிலையே மனித உறவுகளும் மானிடச் செல்வங்களும். ஆனால் இன்று பெற்றோரை அறியாப் பிள்ளைகளும், கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்றவைகளும் எம் வாழ்வில் சாதாரன சம்பவங்களாக மாறி விட்டன. மனச்சாட்சி மறைந்து போவதும், மனித மாண்புகள் மங்கிப் போவதும், சமுதாய ஒழுக்கங்கள் ஒதுங்கிப் போவதுமே இவற்றிற்கு காரணங்களாகின்றன.

இன்று எம் இன அழிவிற்கும் எமது சமுதாய சீர்கேடுகளுக்கும் அதி முக்கிய காரணம் அன்பற்ற நெஞ்சங்களின் வாழ்க்கை நெறிகளும் அவை ஏற்படுத்தும் பாவமுமாகும். அடிப்படையிலே எம் பாவங்களுக்கு காரணமாய் இருப்பவை சுய நலம், போசனப் பிரியம், இச்சைகளுக்கு இடம் கொடுத்தல், பேராசை, சோம்பல், பகமை, கோப உணர்வுகள் போன்றவையாகும். நாம் எப்போது இவற்றின் கனாகனத்தை உணர்ந்து இவற்றை அகற்றி அன்புள்ளம் கொண்ட கிறிஸ்தவ வாழ்வு வாழ்கின்றோமோ அன்றே எம் உள்ளங்கள் உயிர் பெறும். அன்று சிலுவையிலே இயேசு உயிர் துறந்தார். எம் பாவத்திலிருந்து நாம் மீட்படைய தம்மை அர்ப்பணித்தார். அந்த உயிர்ப்பின் மகிமையில் பங்கு கொள்ளும் நாமும் பாவ வாழ்வில் இருந்து அருள் வாழ்வில் உயிர் பெற்று உத்தம கிறிஸ்தவர்களாக உயிர்த்த கிறிஸ்துவின் வழியில் புதிய உலகம் படைப்போம்.

## குணம் பெற வாருங்கள்

குருநகர் பரிசுத்த காணிக்கை மாதா கோவிலில் அருள் திரு. B. F. பொனிபஸ் அடிகளார் நடாத்திவரும் குணமாக்கல் வழிபாடு:-

நொந்த உள்ளங்களின் நோ போக்கும்; அந்தரித்து அலைவோர்க்கு ஆறுதல் அளிக்கும் அசுத்த ஆவியின் அதிகாரத்தை அடக்கி, அதன் பிடியிலிருந்து விடுதலை தரும்

குணமாக்கும் வழிபாடு நடைபெறும் நாட்கள்.

| | | |
|---|---|---|
| முதல் வெள்ளி. | காலை 10...12 வரை | பொது வழிபாடு |
| வெள்ளி<br>செவ்வாய் | காலை 9.30...12 வரை | தனியார் வழிபாடு |

விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் இறையேசுவின் அன்புக்கரத்தின் அணைப்பைப் பெற வாருங்கள். இறையனுபவம் பெற்று இறையரசின் செய்தி பரப்ப வாருங்கள். குணம் பெற வாருங்கள்.

தகவல்:- L. C. நீக்கிலஸ் (பப்பா)
இல, 6, ஒடக்கரை வீதி
யாழ்ப்பாணம்.

# எங்கள் தேவன் எழுந்தார்!

ஆக்கம்: "மெலானிப்பிரியா" அச்சுநகர்

பார்த்திருந்த பாவிகளின்
பாவம் போக்க
பனிக்குளிரில்
பூத்தெழுந்த மலராய்(ப்)
புவிதனில் வந்தார்
பரலோக பிதாவின்
சுதன்...
காலங்கள் கடந்த
கடவுளின் மகன்...
வேதங்கள்
வியக்கும்
விண்ணின் பரன்
தொழுவத்தின்
புல்லணையைத்
தொட்டிலாய் மாற்றித்
துயின்ற பாலன்
எழுந்தபோது
ஏரோது முதலாம்
ஏதர்கள்
தங்கள் இராஜ்ஜம்
விழுந்து போனதென்று
விம்மினராம்...
மூபத்து மூன்றகவை
முடிந்தபோது — ஒரு
தீபத்தின் ஒளியாய்
எங்கள்
தேவ மைந்தன்
பாவங்கள் போக்கும்
நல்ல
போதனை செய்தான் -
வேடங்கள் போட்ட - சில
வீணரை வைதான் ...
அந்த
நித்தியம்...
நிதமும் உரைத்தது
உத்தம வேதத்தின்
சத்தியம் ...
ஆரும்
ஆரையும்
தீர்ப்பிடாதீர் எனத்
திருத்திச் சொன்னவன்
நீரும் ஆவியும்
நன்மை தரும்
ஸ்நானம் தரும் என
நெஞ்சில்
நிறுத்திச் சொன்னவன்.
பேரும் புகழும்
புழங்கும் பணமும்
பேரரசுக்கான
பாதை தராதென
உறுத்திச் சொன்னவன்
சாரல் மலையின்
ஓரத்தில் நின்று
மலைப்பொழிவெனும்
மாபெரும் மாலையை
மனதில்
பொருந்தச்சொன்னவன்
போரும் பழியும்
போகட்டும் வேண்டாம்
பகைவரை மன்னிக்கும்
பண்பு அன்பே என
பல்லாயிரம் பேரை
இருத்திச் சொன்னவன் ...
ஒளி விளக்கொன்று
ஒவ்வொரு திக்கிலும்
மிளிர்வதைக் கண்டு
மனமுடைந்த
மாந்தர் சிலர்
கூடினர் ..
கடவுள் மகன்
இவரென்ற வாக்கைச்
சாடினர்...
சாய்த்துப் போடச்
சமயம் ஒன்று
தேடினர் ...
இயேசு
சீடன் ஒருவன்
"ஸ்கரியோத்" என்பான்
துணை நாடினர்...
அந்தக்
கிருபா - மூர்த்தியின்
கால்கள் தொடர்ந்தவன்...
'குருவே வாழ்க' வென
குவலயம் வாழ வந்த
அந்தக்
குணாதீதத்
தருவைப் பணிந்து
தெண்டனிட்டு
முகத்தைப் பார்த்து
முத்தமிட்டான்...
சுற்றி நின்றவர்
சிலுவையில் அறைகவெனச்
சத்தமிட்டார் ...
பிலாத்து என்கின்ற
பலமற்ற மன்னன் ஒரு
சாட்டையால் அடிக்கச்
சட்டமிட்டான் ...
மாதாவும் சீடரும்
மனமுருகிய மாந்தரும்
போதாத காலமிது
போதுமே என்று
புலம்பி அழுது
பின் தொடர்ந்து வர
கல்வாரிப் பாதையில்
எங்கள் கோமகன்
கால்வலிக்க நடந்தார்...
எல்லோரின் பாவங்கள்
எந்திரக் கனமாக
ஏலாமல் தரைதனில்
எகிறி விழுந்தார் ...
பொல்லாத போர்வீரர்
பொன் தோள்தொட்டுப்
போர்வை பறிக்கையில்
புண்பட்டுக் கிடந்தார் ...
கள்வர்கள் நடுவிலே
கரங்கள் விரித்துக்
கழுமரம் ஏறி ...
முள்ளின் கிரீடம்
மன்னவன் தான் என
சிரசினில் சூடி
வல்ல தேவன் மகன்
வலுவிழந்தேழு
வார்த்தைகள் கூறி
எல்லையில்லாவுயிர்
ஏழ்மையாய்த் தனியே
ஏக தந்தையை
அடைந்ததே விழி மூடி ...
மூன்று ஆணிகளில்
அந்த
மூச்சு ...
முடிந்து போனபோது
எல்லாம்
முடிந்ததென்று
முழக்கமிட்டவர்கள்
அடுத்த இரு நாளின்பின்
அதிகாலை வேளை
அவர்
படுத்திருந்த சூரியனாய்ப்
பள்ளியெழுந்த போது
திடுக்கிட்டிருப்பார்கள்
அந்தத்
தீயவர்கள்
சகலதும் இறைவனால்
சாத்தியம் என்று
எங்கள்
சத்திய தேவன்
சாவை வென்றார் ...
சத்தமில்லாமலே
எழுந்து நின்றார் ...
அந்தப்
பித்தர்களின்
பாதம் போன
பாவ வாழ்வின் வேரைக்
கொன்றார் ...
கல்லறை உடைத்துக்
கர்த்தன் நீ எழுந்து
சொல்லிய வார்த்தையைச்
செய்து முடித்ததால்
எங்கள் விசுவாசம்
எழுந்து வந்தது ...
ஈட்டிகள் ஏந்தி
இராப் பகலாய்க் காவல்
காட்டிய காவலர்
கதறியே ஏங்க
மாட்சிமையோடெங்கள்
மன்னர் எழுந்ததால்
எங்கள் விசுவாசம்
எழுந்து வந்தது ...
ஆட்சியோடெங்கள்
அண்ணல் எழுந்ததால்
எங்கள் விசுவாசம்
எழுந்து வந்தது ...

# வன்னியில் சமர் தொடர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளத்தில் கடும் சமர் தொடர்வதனால் அதன் அச்சம் காரணமாக அதனை அண்டிய பகுதியான மல்லாவியில் இருந்து மக்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். கடும் வெய்யிலின் அகோரமும், போதிய மருத்துவ வசதியின்மையும், நல்ல குடிநீர் இன்மையும் மக்களை நாளாந்தம் வருத்துகின்றன. பாடசாலைச் சிறுவர்கள் சத்துணவை உண்ணாமலும், வறுமையின் நிமித்தம் ஒருவேளை உணவே கிடைக்கக்கூடியதாக இருப்பதாலும், சிறுவர்கள் பாடசாலைகளில் மயங்கி விழுவதும் பரிதாபத்துக்குரியது. (இராணுவத்தின்) கிபீர் கண்மூடித்தனமான தாக்குதலால் Easter ஐ அண்மிய காலத்தில் பல அப்பாவி மக்கள் இறந்துள்ளனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலை சென்று திரும்பி வந்து பார்த்தபோது தாயும், தந்தையும் பிணமாகக் கிடப்பதைக் கண்டு கதறி அழும் காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது. இந்நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் மனித முன்னேற்ற நடுநிலையம் உதவ முன்வந்திருப்பது ஆறுதலைக் கொடுப்பதாக இருக்கின்றது.

மனித முன்னேற்ற நடுநிலைத்தின் உதவியுடன் கிளிநொச்சியில் 25 பாடசாலைகளுக்கும், முல்லைத்தீவில் 10 பாடசாலைகளுக்கும் இலைக் கஞ்சி உணவு மதிய நேரங்களில் வழங்கப்படுகின்றது. வறுமை மிகுந்த இந் நிலையில் நெல் மிதமான விளைச்சல் பெற்று தன்னிறைவு அடைந்திருப்பது இறைவனின் ஆசீர்வாதமே என்று அருள்திரு இருதயதாஸ் காவலனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 200 ஆசிரியர்களை கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் அவர்களுக்கு நியமனம் வழங்கி மாதாந்தம் ஊழியமாக 500/= பெறுமதியான உணவுபொருட்களையே அவர்களுக்கு கொடுத்து வருகின்றோம். இதுவரை 45 பேருக்கு இவ்வாறு வழங்கி இருக்கின்றோம், வைத்திய சாலைகளில் மருந்து பற்றாக்குறையும் நோயாளர்களைக் கவனிப்பதற்கு ஊழியர் பற்றாக்குறையும் காணப்படுவதனால் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 100 பேருக்கு நியமனம் வழங்கி அவர்களுக்கும் 500/= பெறுமதியான உணவுப்பொருட்களை மாதாந்தம் வழங்கி வருகின்றோம். அத்தோடு விதவைகளுக்கும் 350/= பெறுமதியான உணவு பொருட்களை வழங்கி வருகிறோம். வட்டக்கச்சி, தருமபுரம் கூழாமுறிப்பு இரணைப்பாலை புதுக்குடியிருப்பு போன்ற பங்குகளை இணைத்து வலையமாக்கியுள்ளோம். நிரந்தர வாசிகளுக்கும் இடம்பெயர்ந்து அங்கு இருப்பவர்களுக்கும் அங்குள்ள பங்குத்தந்தைகளின் ஆறுதல்களும், இறைவார்த்தைகளும் அவர்களுக்கு உறுதி ஊட்டுவதாக இருக்கிறது. மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, மறை ஆசிரியர்களுக்கும் மாதம் மாதம் பயிற்சி நடைபெறுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

எதிர்பாருங்கள்!
வெளிவர
இருக்கிறது.
தேவ அழைத்தல்
சிறப்பிதழ்

## உரும்பிராயில் இளைஞர்களுக்கான தவக்காலத் தியானம்

உரும்பிராய் சுவாமி ஞானப் பிரகாசர் இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டின்படி 2-4-98 வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு யூலனூர் புனித கென்றியரசர் ஆலயத்தில் தியானம் இடம் பெற்றது. பங்குத்தந்தை G. அருள்நேசன் அடிகளார் தியானத்தை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அருள்தந்தை M. V. E. ரவிச்சந்திரன் தியான நெறிப்படுத்துனராக இருந்து அனைவரையும் அரைமணிநேர தனித்தியானத்தில் ஈடுபடவழிகோலினார். இப்போர்க்கால சூழலில் அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் காயப்பட்டவர்களாக, நொந்துபோனவர்களாக இருக்கிறோம் என்பதை உணரச் செய்து, காயப்பட்ட மருத்துவரான இயேசுவின் பாடுகளோடு இணைந்த தியானமாக, எம் காயங்களுக்கு அர்த்தம் காணச் செய்தார். அதே வேளையில் ஒருவர் ஒருவருடைய காயங்களை துன்ப வடுக்களை குணப்படுத்தும் ஓர் உன்னத அழைப்பு ஒவ்வொரு இளைஞனுக்கும் சிலுவையில் இருந்து தரப்படும் சவால் நிறைந்த அழைப்பு, என்பதை உணரச் செய்தார்.

தொடர்ந்து உறவு வாழ்வுக்கான தேவையை, தேடலை முன்வைத்து ஒப்புரவு அருட்சாதனத்தின் முக்கியத்துவத்தையும், அதன் சமூகத் தன்மையையும் சாதாரண சமுதாய வாழ்க்கை சம்பவங்களோடு விளக்கினார். மேலும் இளைஞர்களிடையே ஒருவர் ஒருவரை புரிந்து, மன்னித்து ஏற்றுக் கொள்வதன் மூலம் புதிய அன்புச் சமூகம் எம் மண்ணில் விடியச் செய்யலாம் என்ற நம்பிக்கை உணர்வை இளைஞர்களிடையே தோற்றுவித்தார். ஒப்புரவு அருட்சாதனம் பற்றிய பல கருத்துக்கள் பரிமாறப்பட்டு இளைஞர்களிடையே எழுந்த பல கேள்விகளுக்கும், விடைகள் நெறியாளரால் தரப்பட்டன. இதில் அருட்சகோதரன் எமில் இராஜேஸ்வரன் போல் அவர்கள் பெரும்பங்காற்றினார். இறுதியில் பாவ மன்னிப்பு வழிபாடு இடம் பெற்றது. பின் வருகை தந்திருந்த அருள்தந்தை M. யேசுரட்ணம் அடிகளார் உட்பட அனைத்து அருள்தந்தையர்களும் ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார்கள். தொடர்ந்து பங்குத்தந்தை அருள்திரு G. அருள்நேசன் அடிகளாரின் பண்பாட்டு திருப்பலியுடன் மாலை 6-00 மணியளவில் தியானம் இனிதே நிறைவு பெற்றது.

ஒட்டு மொத்தத்தில் இத்தியானம் எம்மைப்புதுப்பித்து, பாஸ்கா விழாவை கொண்டாட உதவியது என்பதில் ஐயமில்லை.

தகவல்
J. றெஜிதரன்.

## யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் விழாக்கள்

**1. பங்குகளில் இளையோர் தின விழா**

காலம்:– 17–05–1998 ஞாயிற்றுக்கிழமை

நிகழ்வுகள்;– சிறப்புத்திருப்பலி, கருத்தரங்குகள், போட்டிகள் விளையாட்டுக்கள், நாடகங்கள்.

**2. கோட்ட மட்டத்தில் இளையோர் தின விழா**

காலம்:– செப்ரெம்பர் மாதத்தில் 30ஆம் திகதிக்கு முன் ஓர் வசதியான நாளை தெரிவு செய்யலாம்.

நிகழ்வுகள்:– பங்குமட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிகழ்வுகள்.

பொறுப்பாளர்:– மறைக்கோட்ட முதல்வர், மறைக்கோட்டத்தில் இளையோர் ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் அருள்தந்தையும் ஏனைய அங்கத்தவர்களும்.

**3. மறைமாவட்ட எழுச்சி விழா**

காலம்:– 03–10–1998 சனிக்கிழமை

நிகழ்வுகள்:– ஆயர் தலைமையில் மகாநாடும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

பொறுப்பாளர்:– யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு.

அருள்திரு. S. J. இராஜநாயகம்
தலைவர்
யாழ். இளைஞர் ஆணைக்குழு.

## யாழ். மறைக்கல்வி நிலையத்தின் ஊடாக வேதாகம மறைக்கல்வி வளர்ச்சிக்கான சில செயற்பாடுகள்

- ★ பங்கில் மறை ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கருத்தரங்குகள்.
- ★ இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள், வளர்ந்தோருக்கான கருத்தரங்குகள்.
- ★ வேதாகம அடிப்படை அறிவை ஊட்டுவதற்கான செயற்பாடுகள் – வேதாகம கற்றல் வகுப்புகள்.
- ★ யூபிலி ஆண்டு 'பரிசுத்த ஆவியார்' மையப் பொருளில் கட்டுரை, பேச்சு, வினா விடை, நாடகப் போட்டிகள்.
- ★ பங்கில் வேதாகம வாரம், மறைக் கல்வித் தினம் இவற்றிற்கான ஊக்குவிப்புக்கள்.
- ★ க.பொ.த. உயர்தர வகுப்பு கிறிஸ்தவ பாடக் கருத்தரங்குகள், மீட்டல் வகுப்புக்கள். (வசதி குறைந்த இடங்களில் உதவியளித்தல்)
- ★ தேசிய மறை ஆசிரியர் தேர்வுக்கான ஆயத்தங்கள்.
- ★ மறைக்கல்வித் தேர்வு. (ஐப்பசி நடுப்பகுதியில்)

அருள்திரு. R. C. X நேசராஜா
இயக்குனர்
யாழ். மறைக்கல்வி நிலையம்

## பருத்தித்துறை மறைக்கோட்டத்தினர்க்கு பண்டத்தரிப்பில் அன்பியக்கருத்தரங்கு

பருத்தித்துறை மறைக்கோட்ட தென்மராட்சி பங்குத் தளங்களுக்கான பங்கேற்கும் திருச்சபையாய் மலர, அன்பியக் கருத்தரங்கு கடந்த 13, 14, 15-3-98இல் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

13ஆந் திகதி பிற்பகல் 4 மணிக்கு வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. ஆரம்ப உரையை சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் நிகழ்த்தினார். கருத்தரங்கு தொடர்ந்து பல அமர்வுகளாக இடம் பெற்றது. இதில் அன்பியம் என்றால் என்ன? அன்பியம் நமக்குத் தேவைதானா? பங்குகளில் நாம் எவ்வாறு அன்பியத்தை நடாத்துவது, திருச்சபையில் பொது நிலையினரின் பங்களிப்பு போன்ற விடயங்களிற்கு விளக்கங்களும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

மேற்படி அமர்வுகளை அருட்தந்தை, அன்ரனிபாலா, அருட்தந்தை யேசுரட்ணம், அருட்தந்தை சாள்ஸ், அருட்தந்தை பிரான்சிஸ், அருட்தந்தை ரவிச்சந்திரன், அருட்தந்தை றோகான் ஆகியோர் திறம்பட நடாத்தினார்கள்.

இக் கருத்தரங்கில் தாளையடி, முகமாலை, மிருசுவில், சாவகச்சேரி பங்குகளைச் சேர்ந்த 49 பேர் பங்குபற்றினர். இதில் 36 பெண்களும் 11 ஆண்களும் 2 அருட்சகோதரிகளும் பங்குபற்றினர். இறுதி ஒன்றுகூடலில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

மேற்படி கருத்தரங்கு எமக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றுத்தந்தன.

அ. செல்வராஜன்
கச்சாய், கொடிகாமம்

## எமது நாட்டை ஆபத்திலிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை புதிய நியமனங்களின் பின்னர் புதிய தலைவர் பேரருள்திரு ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை தலைமையில் கூடிய போது வழமையான தமது பாஸ்கா திருமுகத்தை நிறுத்தி இக்கட்டான நிலையில் இருந்து நாட்டை மீட்க உழைக்கும் படி ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் வேண்டுகோள் விடுப்பதென முடிவு செய்தனர்.

இத் துன்பம் மிக்க நேரத்தில் தங்கள் வேற்றுமைகளைக் களைந்து பேச்சு வார்த்தை மூலமும், கலந்துரையாடல் மூலமும் நீண்ட காலமாகச் செயல் அற்றுக் கிடக்கும் எமது நாட்டை ஆபத்திலிருந்து மீட்க உழைக்கும் படி நாட்டின் பெயரால் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தொடரும் கொடிய போரினால் எமது நாட்டு மனித வளமும், மூல வளமும் வேகமாக அழிந்து கொண்டு இருக்கிறது. பிரச்சனைகளுக்கு முடிவு காணப்படுவதாய் இல்லை. உங்கள் 2 அரசியல் கட்சிகளுக்குமிடையேயுள்ள உடன் உழைப்பின்மையும், ஒத்துழைப்பில்லாமையும் இறுதியான அரசியல் தீர்விற்குப் பெரும் தடையாகவுள்ளது. கடந்த வருடத்தின் இறுதியில் நீங்கள் இருவரும் இனப் பிரச்சனை சம்பந்தமான உடன்பாட்டில் கையொப்பம் இட்ட போது நாம் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அது தொடர்ந்து இனப் பிரச்சனைக்கான தீர்வு காண செயற்படுத்தப்படவில்லை என்று மேலும் தெரிவித்தனர்.

பருத்தித்துறை
**புனித தோமையார் புதிய ஆலயத் திறப்பு விழா**
09-05-1998 காலை
9–30 மணிக்கு
யாழ். ஆயர்தலைமையில்
நடைபெறும்.
அருள்திரு
P. M. இம்மனுவல்
பங்குத்தந்தை

## கண்ணீர் அஞ்சலி

மார்ச்மாதம் 3ஆம் திகதி மறைந்துபோன திரு காமினி நவரட்ணா மறக்கப்பட முடியாத ஒருவர். தன் பெயரை தமிழ் மக்களின் மனங்களிலும், வரலாற்றிலும் பொறித்த ஒரு சிங்களவர். "Saturday Review" என்ற ஆங்கிலப் பத்திரிகை மூலம் தமிழ் மக்களுக்காக அவர் ஆற்றிய பணி மறக்கப்பட முடியாததே. அவருக்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கிறோம். (ஆ-ர்)

## அருள்திரு. S. H. ஜெபநேசன் அடிகளின் நினைவுமலர் வெளியீடு

கிளி - முல்லை மறைக்கோட்ட மனித முன்னேற்ற நிலைய இயக்குன ஊழியர்களால் மனித முன்னேற்ற நிலைய இயக்குனராக இருந்து மறைந்துபோன அருள்திரு. S. H. ஜெபநேசன் அடிகளின் நினைவுமலர் 29/4/98 அன்று வெளியிடப்பட்டது.

## கிளி- முல்லை மறைக்கோட்டத்தில் விருட்சம்- புதிய மாத இதழ்

கிளி - முல்லை மறைக்கோட்டத்தில் விருட்சம் என்ற பெயரில் ஒரு புதிய மாத இதழ் ஒன்று ஈஸ்ரருடன் வெளி வரத் தொடங்கியுள்ளது. கத்தோலிக்க சமய சம்பந்தமான விடயங்கள், செயற்பாடுகள் அறிவித்தல்கள், அறிவுரைகள், கட்டுரைகள் என்பவற்றுடன் கிளி - முல்லை மறைக்கோட்டம் முழுவதையும் இணைக்கும் ஒரு செய்திப் பத்திரிகையாக இது செயற்பட இருக்கின்றது.

### புனித வின்சன் டி பவுல் சபையின் கொடி தினம்

புனித வின்சன் டி பவுல் மத்திய சபையினர் இம் மாதம் 26ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு கொடி தினம் ஒன்றை அனுசரிக்கின்றனர்.

மே 24, 1998 உலக சமூகத் தொடர்பு தினம் சிறப்பிதழ் அடுத்தவாரம்.

**ஜெருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்கு மட்டும் தான் இந்நாட்களில் நடந்தவை தெரியாதோ** (லூக். 24: 18)

இப்பத்திரிகை புனிதவலன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1998ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது P193